<u>சார்பு நீதிமன்றம், பெருந்துறை</u>

**OS** 05/2015

2023-ம் ஆண்டு நவம்பர் மாதம் 01-ம் நாள் Dw1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திருமதி.கே.கிருஷ்ணபிரியா, எம்.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நாள் 01.11.2023

Dw1(சுப்பிரமணியம்)

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**<u>மறு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

அவ எண் 168/2013 வழக்கில் 17.09.2014 தேதியில் நான் வாசா1 ஆக குறுக்கு விசாரணை செய்தபோது பூர்வீக சொத்தில் பிள்ளைகளுக்கு உரிமை உள்ளது என்றால் என்ற கேள்விக்கு இருக்கலாம் என்று பதிலளித்துள்ளேன் என்றால் சரி. மேற்படி சாட்சியம் பகுதி **வாசாஆ 14.** அதே குறுக்கு விசாரணையின்போது 2வது பக்கத்தில் அந்த வழக்கின் வாசாஆ1 எழுதிய தேதியில் அந்த சொத்துக்கள் பழனிச்சாமியின் பூர்வீக சொத்துக்கள் என்று தெரிந்து கொண்டேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரி. அந்த பகுதி **வாசாஆ15.** (மேற்படி வழக்கில் உள்ள சாட்சிய முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை நீதிமன்ற சான்றிட்ட நகல் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டது. ) 17.09.2014 தேதிய குறுக்கு விசாரணை 2வது பக்கத்தில் அந்த வழக்கின் 2,3 பிரதிவாதிகளுக்கும் அவரின் தந்தைக்கும் இடையே பாகப்பிரிவினை ஏற்படவில்லை என்று தெரிந்து கொண்டேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரி. அந்த பகுதி **வாசாஆ16**. 17.09.2014 தேதிய குறுக்கு விசாரணை 3 வது பக்கத்தில் "பழனிசாமி கச 563 பி யில் 1.11 சென்டும், 562 பி யில் 40 சென்டும் ஆக மொத்தம் 1.51 சென்ட் பாத்தியமா என்றால் ஒரே இனமாக உள்ளது" என்றும் அதே பக்கத்தில் "தற்போது ரீச எண் 527/2 வில் 66 -1/2 ஏர்ஸ் படி 0.66.5 ெ உற அதன் விஸ்தீரணம் 1 ஏக்கர் 64 சென்ட் என்றால் சரி " என்றும், அதே பக்கத்தில் "ரீச 527/2 ல் உள்ள 77 சென்ட் போக மீதி 83 -1/2 சென்ட் ஆவணத்தின்படி உள்ளது " என்றால் சரி. மேற்படி 3ம் பக்கத்தில் உள்ள பகுதிகள் **வாசாஆ 17 முதல் வாசாஆ 19 ஆகும்.** 17.09.2014 தேதிய குறுக்கு விசாரணை 4வது பக்கத்தில் " பழனிச்சாமி அவர் இறக்கும் வரை அவர் மனைவி மற்றும் மகன்களுடன் சுமூக உறவில் இருந்தாரா என்றால் பிரச்சினை இருந்ததாக சொன்னார். இறப்பதற்கு 2 வருடத்திற்கு முன்பு அவ்வாறு கூறினார்" என்று நான் சொல்லியுள்ளேன்

என்றால் ஆமாம். அந்த பகுதி **வாசாஆ 20.** வாசாஆ 3 மற்றும் 13 தேதிகளுக்கு முன்பு எனக்கும் வாதி சுரேஷ்குமாரின் தந்தையுடன் வரவு செலவு எதுவும் இருந்ததா என்றால் இல்லை. வாதியின் தந்தை வேறு யாரிடமாவது வரவு செலவு வைத்திருந்தாரா என்று என்க்கு தெரியுமா என்றால் தெரியாது. பொதுவாக வாதியின் தந்தை யாரிடமும் கடன் வாங்குவது கிடையாது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாசாஆ 13ல் யார் யார் சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் டி பி முருகேசன் மற்றும் சோமசுந்தரம் ஆகியோர் கையொப்பம் செய்துள்ளார்கள். மேற்படி சோமசுந்தரம் இறந்து விட்டார் என்றால் சரி. சோமசுந்தரம் எனக்கு என்ன உறவு முறை என்றால் என் அத்தையின் மருமகன் ஆவார். மேற்படி சோமசுந்தரம் வாசாஆ 3 லும் சாட்சியாக கையொப்பம்செய்துள்ளார் என்றால் ஆமாம். சோமசுந்தரம் நான் அழைத்ததன் பேரில் வந்தாரா என்றால் இல்லை, என் சித்தப்பா பழனிச்சாமி அழைத்ததான பேரில் வந்தார். வாசாஆ 3 ல் மற்றொரு சாட்சி யார் என்றால் சண்முக சுந்தரம். அவரை யார் அழைத்தது என்றால் சித்தப்பா தான் அழைத்தார். வாசாஆ 13ல் மற்றொரு சாட்சி கையொப்பமிட்ட முருசேகனையும் என் சித்தப்பா தான் அழைத்தாரா என்றால் ஆமாம். நான் சொல்வது பொய் என்றும், வாசாஆ 3 மற்றும் 13ல் உள்ள சாட்சிகள் எல்லோரையும் நான் தான் அழைத்தேன் என்றால் சரியல்ல. ஆகையால் வாசாஆ 3 மற்றும் 13 மற்றும் அதன் மூலம் ஏற்பட்ட தீர்ப்புகள் வாதியின் பங்கை கட்டுப்படுத்தாது என்றால சரியல்ல. வாதி கோரியவாறு பாகம் அவருக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

Sd/-K.Krishnapriya,1.11.23
Subordinate Judge,
Perundurai.

uploaded by SS